# HINDU SPIRITUAL AND SERVICE FOUNDATION

அன்புடையீர்,

**அனைத்து ஆன்மிக மற்றும் சேவை அமைப்புகளுக்கு, ஹிந்து ஆன்மிக மற்றும் சேவை அறக்கட்டளையின் பணிவான வணக்கங்கள்.**

**ஹிந்து ஆன்மிக மற்றும் சேவை அறக்கட்டளை**, இந்தியா மற்றும் உலகளாவிய அளவில் வந்தனம் எனப்படும் வழிபாட்டு நிகழ்வினை நடத்தி வருவதை தாங்கள் அறிவீர்கள். நமது கலாசாரத்தை உலக அரங்கிற்கு பறை சாற்றும் வண்ணம் இந்த நிகழ்சிகள் அமைந்திருக்கின்றன.

எமது இந்த அணுகுமுறையானது, அறிவியல் ரீதியாகவும், பாரம்பரிய முறையிலும் கட்டமைக்கப்பட்டதாகும். இதன் மூலம் சமுதாயத்தில் பல்வேறு தரப்பு மக்களிடமும்

1) **வனம் மற்றும் வன விலங்குகளைப் பாதுகாத்தல்**
2) **ஜீவராசிகளைப் பேணுதல்**
3) **சுற்றுச்சூழலைப் பராமரித்தல்**
4) **பெற்றோர், பெரியோர் மற்றும் ஆசிரியர்களை வணங்குதல்**
5) **பெண்மையைப் போற்றுதல்**
6) **நாட்டுப்பற்றை உணர்த்தல்**

ஆகிய மேற்கண்ட ஆறு கருத்துக்களை கொண்டு செல்கின்றோம்.

பாரத தேசத்தின் உயிர் புள்ளியாக விளங்கும் கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் மிகப் பரவலாக கொண்டு செல்வதற்கு மேற்கண்ட ஆறு கருத்துக்களும் வழி வகுக்கிறது.

மேற்கண்ட உயர் பண்புகளை பாதுகாத்து வருவதும், அடுத்த தலைமுறைக்கு அதனை ஒப்படைப்பதும், குடும்பம் என்னும் உயர்வான அமைப்பாகும். இதன் வழியாகத்தான் சகிப்புத்தன்மை, இரக்கம், பகிர்ந்து உண்ணுதல் போன்ற உயர்குணங்கள் வாழையடி வாழையாக நம் நாட்டில் வளர்ந்து வருகிறது.

இந்த மிக உயர்ந்த பண்பாட்டை எந்த கல்விக்கூடங்களும் கட்டமைப்பதில்லை. ஆனால், நமது நாட்டில் குடும்பங்களும், ஆன்மிக நம்பிக்கை கொண்ட சமுதாய கட்டமைப்புகளும் இதனை காப்பாற்றி, வளர்த்து வருகிறது.

மேற்கூறிய ஆறு கருத்துகள் சார்ந்த பண்புகளில் பங்கேற்று உயரிய இலக்கினை நாம் அடைவோம். இத்துடன் எவ்வாறு நிகழ்ச்சியினை நடத்த இருக்கிறோம் என்பதனை இத்துடன் விளக்கியுள்ளோம். மேலும் தகவல்கள் அவ்வப்போது அமைப்பின் வழி உங்களை வந்தடைய ஆவன செய்வோம்.

மேலும் தகவல்களுக்கு :

7823939086 / 9345954670 / 74 மற்றும், 044 - 2462 2310/11/12/13 ஆகிய எண்களிலும், hssfpromo1@gmail.com என்னும் மின்னஞ்சல் வழியும், தொடர்பு கொள்ளலாம்.

**வாருங்கள் வளமான உலகை இணைந்து உருவாக்குவோம்.**

நன்றி மற்றும் நமஸ்காரங்கள்.

இப்படிக்கு,

**திரு. சேஷாத்திரி**
**பிரதான ஒருங்கிணைப்பாளர் (ஆன்மிக அமைப்புகள்)**
**ஹிந்து ஆன்மிக மற்றும் சேவை அமைப்பு - தமிழ்நாடு பிராந்தியம்.**

Founder :
Pujya Swami Dayananda Saraswati
Board of Trustees :
Dr. Padma Subrahmanyam | Sri. S. Gurumurthy | Smt. R. Rajalakshmi | Sri. K. Prabhakar | Sri. P. Ganapathy | Sri. R. Vaidyanathan
Head Office: 4th Floor, Ganesh Towers, 152, Luz Church Road, Mylapore, Chennai - 600 004. Ph:+91 44 2466 0339
Admin Office : Bharat Maata Sadan, Gargi, New No: 6, Old No:9, De'Monte Street, Santhome, Chennai-600004 Ph: +91 44-2462 23 11/12/13
E-Mail : hssfhq@gmail.com Website : www.hssf.in

**மானவ வந்தனா**

***மனுஷ்யோ தெய்வ ரூபேண*** என்பது ஆன்றோர் வாக்கு.

அந்த வகையில் இறைவன் நமக்கு மனிதர்களின் வடிவில் பல நன்மைகளை செய்து வருகிறான்.

நாம் நமது அன்றாட வேலைகளில் பல சமயம் இவற்றை புறம் தள்ளி விடுகிறோம். அது மாத்திரம் இல்லை அதனை புறக்கணிக்கவும் செய்கிறோம். உண்மையில் ஒரு நொடி இது போன்ற செயல் வீரர்களின் செயல்களை நாம் சற்றே நோக்கினால் நாம் வாழ்வதின் அர்த்தம் என்ன என்பது தெளிவாகத் தெரியும்.

நாம் இன்று நிம்மதியாக உறங்கிக்கொண்டும் ஆடல் பாடல் போன்ற கேளிக்கைகளிலும் நம்மை மறந்து ஈடுபட்டிருக்கையில், எங்கோ ஒரு உரை பனி மலையின் ஒவ்வொரு ஓரத்திலும் ஒரு வீரன் நம்மை பாதுகாத்துக் கொண்டிருக்கிறான்.

நாம் வாழும் பகுதிகளில் ஒவ்வொரு இடத்திலும், காவல் துறை, அரசாங்க சேவையில் உள்ள தீயணைப்புத்துறை, மருத்துவம், சுகாதாரம் என அனைத்து துறைகளும் நம்மை அரண் போல காத்துகொண்டு இருக்கின்றன.

இவர்களுக்கு வாழ்வின் ஒரு நாளேனும் நாம் வந்தனம் செய்யவில்லை எனில் நாம் வாழ்வதன் அர்த்தம் என்ன என்று நம்மை நாமே கேள்வி கேட்கும் நிலைக்கு தள்ளப்படுகிறோம்.

இதனை உணர்ந்தே ஹிந்து ஆன்மிக மற்றும் சேவை அறக்கட்டளை, தனது கண்காட்சிகளில், 6 முக்கிய அம்சங்களில் நாட்டுப்பற்றை உணர்த்துதல் என்பதை ஒரு முக்கிய அம்சமாக போற்றுகிறது.

இதனை ஒவ்வொரு ஆன்மிக, சேவை மற்றும் சமுதாய அமைப்பும் பின்பற்றி அவர்களும் இத்தகைய வந்தனங்களில் ஈடுபட்டு தங்களது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிக்க வேண்டியது வாழ்நாள் கடமை என்று கருதுகிறது.

எனவே வரும் 26ம் தேதி, ஜனவரி மாதம், **மானவ வந்தனா** என்னும் மானுடத்தை போற்றும் நிகழ்வை ஒவ்வொரு அமைப்பும் நாட்டுப்பற்றை வளர்ப்பதற்கு அனைவரும் ஊக்கம் கொடுக்க தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

மற்ற தேசங்களைப்போல பாரதம் வெறும் ஒரு பிடி மண் அல்ல. இந்த தேசத்தின் உயிர் மூச்சு, ஹிருதய துடிப்பு சிந்தனை என அனைத்தும் மனிதலுள் இணைந்து உருவான தேசம்.

நம் தேசமும் அதன் தெய்வங்களும் நம் தர்மமும் இணைந்தது தான் இந்த பாரதத் திருநாடு. இந்த மூன்றையும் பிரித்து பார்க்க இயலாது.

அதனால் ஹிந்து ஆன்மிக மற்றும் சேவை அறக்கட்டளை நடத்தும் இந்த நிகழ்விற்கு அனைவரும் ஒத்துழைப்பு தருவீர்கள் என நம்புகிறோம்.

அதிலே உங்கள் பகுதியில் இருக்கும் ஏதாவது ஒரு ராணுவ வீரரை அழைத்து அவருக்கு பொன்னாடை போற்றி நாட்டுப்பற்றை பற்றிய உரை நிகழ்த்தச்சொல்லி பெருமை கொள்வோம்.

இதுபற்றிய மேலும் விவரங்களை www.hssf.in என்னும் இணையதளத்தின் வாயிலாகவோ, அல்லது கீழ்காணும் தொலைபேசி எண்கள் வாயிலாகவோ தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ள வேண்டுகிறோம்.

**7823939086 / 9345954670 / 74 மற்றும், 044 - 2462 2310/11/12/13 ஆகிய எண்களிலும், hssfpromo1@gmail.com என்னும் மின்னஞ்சல் வழியும், தொடர்பு கொள்ளலாம்.**

**எதிர் வரும் 26-01-2021 அன்று நடைபெற இருக்கும் "மானவ வந்தனா-2" என்னும் நிகழ்ச்சிக்கான வழிகாட்டுதல்கள்.**

**தேதி: 26-01-2021** **நேரம்: காலை 10.00 - 11.00 மணி வரை**

**நாட்டுப்பற்றை வளர்த்தல்**

**யார் யாரெல்லாம் பங்கு கொள்ளலாம்?**

ஆன்மிக மற்றும் சமூக அமைப்புகள், மடாலயங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கார்ப்பரேட்டுகள், வணிக, தொழில் வல்லுநர்கள், குடும்பங்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களும் எல்லா சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினர்களையும் பங்குபெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**முக்கிய குறிப்பு : அரசின் அனைத்து கொரோனா வழிகாட்டுதல்களும் அவசியம் பின்பற்றப்பட வேண்டும்**

**மானவ வந்தனா-2 பாரத மாதா வந்தனம் மற்றும் பரம்வீர் வந்தனம்**

செய்ய தேவையான பொருட்கள்

1. மஞ்சள் தூள் — 5 கிராம்
2. குங்குமம் — 5 கிராம்
3. சந்தனம் — 2 கிராம்
4. தண்ணீர் — 1 லிட்டர்
5. விளக்கு — 1 அல்லது அதற்கு மேற்பட்டவை விரும்பியபடி
6. மலர்கள் — உதிரி துளசி, துளசி மாலை போதுமான அளவு
7. ஊதுவத்தி — 2 எண்கள்
8. கற்பூரம் — 5 எண்கள்
9. சிறிய பேக் தீ பெட்டி — 1 எண்
10. சிலைகள் அல்லது — போட்டோ படங்கள், பாரத மாதா, ராணுவ வீரர்கள்

பின்னணியில் தங்களின் அமைப்பு மற்றும், இயன்றால் HSSF (ஹிந்து ஆன்மிக சேவை கண்காட்சி அமைப்பின் லோகோவுடனான ஒரு பேனர்) - ஜேபெக் , பி.டி.எஃப் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**நிகழ்ச்சி நிரல்**

1. **காலை 10.00 முதல் 10.09 மணி வரை**

   விளக்கு ஏற்றுதல், மைத்ரீம் பஜதே மற்றும் கருப்பொருள் பாடல். (லிங்கில் கொடுக்கப்பட்டுள்ளது)

   1. https://youtu.be/Z-LpxijA1mY - அசதோமா சத்கமய
   2. https://youtu.be/iyBA1BRs2y8 - மைத்ரீம் பஜதே
   3. https://youtu.be/4ga04q7_TTk - ஈஸா வாஸ்யம் எனத் தொடங்கும் பாடல்

2. **காலை 10.10 முதல் -10.13 மணி வரை**

   ஒருங்கிணைப்பாளரால் பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டுதல்கள்.

3. **காலை 10.14 முதல் -10.15 மணி வரை**

   **HSSF** அமைப்பு மற்றும் சம்ஸ்காரம், சின்னம் மற்றும் குறியீடு, கருத்துகளைப் பற்றிய சுருக்கமான விளக்கம்.

4. **காலை 10.16 முதல் 10.30 மணி வரை**

   வந்தனம் (லிங்கில் கொடுக்கப்பட்டுள்ள பாடல்கள் இசைக்கப்படலாம் அல்லது ஸ்லோகங்கள் இருக்கலாம். மந்திரம் அல்லது போற்றி சொல்கையில் பூக்களை வழங்கவும்)

   1. https://youtu.be/p8JcVvSZMLw - பாரத தாயே
   2. https://youtu.be/sEMi39vexAw - ஹோ அஸ்ஸி ஃபௌஜி
   3. https://youtu.be/p5TlBMzR9Kk - கதம்
   4. https://youtu.be/GXgo4yrRrD8 - ஜெயோஸ்துதே
   5. https://youtu.be/L6pHa2U5V3Y - ஜோகதா சிரி பௌகினால்
   6. https://youtu.be/Pz5eegFSC0Q - நமோ நமோ

5. **காலை 10.31 முதல் 10.40 மணி வரை**

   வாழ்த்து மற்றும் ஆசி உரை அல்லது நிகழ்ச்சி குறித்து உரை

6. **காலை 10.41 முதல் காலை 10.56 வரை**

   திட்டத்தைப் பற்றிய கருத்து அல்லது அனுபவத்தைப் பகிர்தல்

7. **காலை 10.57 முதல் காலை -11.00 வரை**

   வந்தே மாதரம்.

   1. https://youtu.be/c3UP5dmsAk8 - வந்தே மாதரம்

# பொது அறிவிப்பு பேனர் டிசைன் – Genaral Design




---




**தங்களின் அமைப்பு / தனி நபர்கள், கணினி வழி பதிவு செய்து கொள்ள வழிகாட்டி :**

**படி 1.**

www.hssf.in என்ற இணைய தளம் சென்று அங்கே கொடுக்கப்பட்டுள்ள ரெஜிஸ்ட்ரேஷனுக்கான பொத்தானை கிளிக் செய்து உங்கள் விவரங்களை பதிவு செய்க.

**குறிப்பு:**

தங்களுடன் சேர்ந்து வந்தனம் செய்தவர்களுக்கு டிஜிட்டல் சான்றிதழ் தேவை எனில் அவர்களையே தனிப்பதிவு செய்வதற்கு பரிந்துறை செய்யவும்.